அவருடைய அறிவுரையின் பேரில் சென்ற ஆண்டு வீட்டு வசதி வாரிய அதிகாரிகளுடன் நானும் சம்பந்தப்பட்ட தேவைப்படுகின்ற இடத்தைப் பார்வையிட்டேன். போக்குவரத்து, குடிநீர் வசதி உள்ள பேரணாம்பட்டிலிருந்து குடியாத்தம் சாலை, பேரணாம்பட்டிலிருந்து ஆம்பூர் சாலையில் வீடுகள் கட்டித் தந்தால் தேவை டிமாண்ட் அதிகமாக இருக்கும். அப்படிப்பட்ட வசதியான இடத்தில் வீடுகள் கட்டித் தர டிமாண்ட் அதிகமாக நிச்சயமாக, நிறையபேர்களை மனுச் செய்யச் சொல்கிறேன். அப்படி மனுக்கள் வரும்பொழுது, இந்த ஆண்டு வீடுகள் கட்டித் தர அமைச்சர் ஆணையிடுவாரா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பேரணாம்பட்டில் இன்றையதினம் வீடு கட்டும் திட்டம் எதுவும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடைய பரிசீலனையில் இல்லை. ஆனால் அதேநேரத்திலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறைந்த பட்சம் 50 நபர்களிடத்திலிருந்து வீட்டு வசதி வாரியம் கட்டித் தருகிற வீடுகளை நாங்கள் பெற்றுக் கொள்கிறோம் என்கின்ற மனுக்களைப் பெற்று தருவார்களேயானால் அதுகுறித்து வீட்டுவசதி வாரியம் தன்னுடைய கூட்டத்திலே முடிவெடுத்து பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *372*, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

372—

புதிய ரக வெற்றிலையை அறிமுகம் செய்தல்

33056*—திருமதி கே. மரியம் உல் ஆசியா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் புதிய ரக வெற்றிலையை அரசு அறிமுகம் செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1995 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இவ்வருடம் எஸ்ஜிஎம்.1 என்ற வெற்றிலையை தென்னிந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் அறிமுகம் செய்துள்ளது.

(ஆ) எஸ்.ஜி.எம்.1 என்ற வெற்றிலை ரகம் அதிக இலை மகசூல் தரவல்லது. குட்டையாகவும், அடர்த்தியாகவும் விரைவிலும் வளரும் கடினமான தண்டு உடைய கொடி. குறுகிய இடைக்கணுவும் பலபக்கக் கிளைகளும் கொண்டது. மக்கள் விரும்பும் மிதமான காரத் தன்மையுடன் கூடிய மஞ்சள் கலந்த பச்சைத் தளிர் வெற்றிலைகள், பூச்சி பூஞ்சான் மற்றும் நூற்புழுக்களுக்கு தாங்கும் தன்மையுடையது.

இந்த ரகம், பாலக்காடு வகையிலிருந்து நேர்வழித் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்ட ரகமாகும். தை-மாசி பட்டம், வைகாசி-ஆடிப்பட்டத்தில் பயிரிட உகந்தது. வயது 2--2½ வருடங்கள், மகசூல் 109.54 இலட்சம் இலைகள்/எக்டேருக்கு மகசூல் அளிக்க வல்லது. தமிழ்நாட்டில் வெற்றிலை பயிரிடப்படும் அனைத்து மாவட்டங்களிலும் பயிரிட உகந்தது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் புதிய ரக வெற்றிலையைத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்துவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த வெற்றிலையினுடைய தன்மையைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். இந்த வெற்றிலை அரிசி உணவு அருந்திய பிறகு வெற்றிலை அணியும் வழக்கம் தொன்றுதொட்டு நம் தமிழ் மக்களுக்கு உரிய ஒரு வழக்கமாக இருந்து வருகிறது. விருந்துக்காரர்கள் தாம்பூலம் தரித்தல் என்று மக்கள் பேச்சு வழக்கில் கூறி வருகின்ற இந்த வெற்றிலை ஒரு மாமருந்தாகும். ஜீரணத்திற்கும், இரத்தத்தைச் சுத்தப்படுத்துவதற்கும் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. சிலப்பதிகாரக் காப்பியத்திலே கோவலன் உணவு உண்ட பிறகு கண்ணகி வெற்றிலை மடித்துத் தந்ததாக, இளங்கோவடிகளும், இராமபிரானுக்கு வெற்றிலையை யார் மடித்துத் தருவார்கள் என்று அசோகவனத்திலே சீதை வருத்தப்பட்டதாகக் கம்பரும் பாடியுள்ளனர். இப்படிப்பட்ட சிறப்புமிக்க இந்த வெற்றிலை அதிகம் சாகுபடியாகும் பகுதிகளிலும், மற்றும் வட இந்தியாவிலும் இந்த வெற்றிலைக்கு அதிக நல்ல மார்க்கெட் இருப்பதன் காரணமாக

[*1995 ஏப்ரல் 20*

பம்பாய், டெல்லி, லக்னோ போன்ற முக்கிய நகரங்களில் குளிர் பதன வசதியுடன் விற்பனைக் கேந்திரங்களை அமைப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்றும், இந்த வியாபார ரீதியில் வெற்றிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த ஆண்டுதான் இந்தப் புதிய ரக வெற்றிலையைத் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம் அறிமுகம் செய்துள்ளது. இந்த வெற்றிலை மேம்பாட்டுத் திட்டம் 8-வது திட்டக் காலத்தில் செயல்படுத்த ரூபாய் 17.82 இலட்சம் செலவிடப்படும். இன்றைக்கு வெளிநாடுகளுக்கு வெற்றிலை ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்ற புள்ளிவிவரம் என்னிடத்திலே இல்லை. ஆனால் எங்கே நல்ல விலை கிடைக்கிறதோ அங்கே சென்று விற்பனை செய்தால் வருவாய் கிடைக்கும் என்று விவசாயிகள் நம்புகிறார்களோ அப்படி வருகின்றபட்சத்தில் உழவர் பெருமக்கள் ஒன்றுகூடி ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலமாக வியாபாரம் செய்ய வேண்டுமென்றும், ஒரு குளிர் வசதி செய்யப்பட்ட லாரி வேண்டுமென்றும் அவர்கள் அரசுக்கு விண்ணப்பம் செய்வார்கள் என்று சொன்னால், மத்திய தோட்டக் கலை வாரியத்திலிருந்து ஒரு லட்சம் ரூபாய் அரசு மானியம் வழங்கித் தரும்.

முற்பகல் 10–40

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்ணும் உணவு, பருகும் நீர், தின்னும் வெற்றிலை என்று நாலாயிர திவ்வியபிரபந்தத்தில் நம்மாழ்வார் அவர்களும், அடுத்தலை உண்டார் அடைபக்கம் செய்தார் என்று திருமந்திரத்தில திருமூலரும், ஆற்றோரம் கொடிக்காலாம் அழகழகாய் வெற்றிலையாம் என்று நாட்டுப்புறப் பாடலும் சிறப்பித்துக் கூறுகின்ற இந்த வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டு பலனுக்கு வர ஒரு வருடம் ஆகிறது. வெற்றிலைக்கு பாதுகாப்பு அதிகம் தேவைப்படுகிறது. வெற்றிலை எளிதில் நோய் தாக்கக்கூடியதாக இருப்பதால் தேவையான மருந்துகள், உரங்கள் ஆகியவற்றை மானியத்துடன் சலுகை விலையில் வழங்குவதற்கும், நீண்டகால கடன் உதவி வழங்குவதற்கும், வெற்றிலைக் கொடிக்கால்களில் வெற்றிலைகளை பறிப்பதற்கு எளிதான நவீன கருவிகளை அறிமுகப்படுத்துவதற்கும், வெற்றிலை அதிகம் சாகுபடி

1995 ஏப்ரல் 20]

செய்யப்படும் கும்பகோணம், கரூர் மற்றும் ஆத்தூர் ஏதாவது ஒரு பகுதியில் வெற்றிலை ஆராய்ச்சி மையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெற்றிலை சாகுபடி என்பதை ஒரே விவசாயி பறந்த அளவிலே பயிரிட முடியாது. ஒரு குடும்பத்திலே இருப்பவர்கள் ஏறத்தாழ ஒரு ½ ஏக்கருக்குள்ளேதான், அதிகபட்சம் பயிரிட முடியும். ஏன்னென்று சொன்னால், அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு தினமும் வேலைவாய்ப்புத் தரக்கூடிய தொழில் இது. ஆனால், இதற்கென தனியாக ஒரு ஆராய்ச்சி மையம் தேவையில்லை. இப்போது தமிழ்நாட்டினுடைய வேளாண் பல்கலைக் கழகத்தின் கீழே உள்ள சிறுகமணி ஆராய்ச்சி மையம் இந்த புதிய வெற்றிலை ரகத்தை வெளியிட்டிருக்கிறது. அங்கு தொடர்ந்து அதற்குரிய ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெற்றிலை போடுவது உடம்புக்கு மட்டும் நல்லது. ஜீரண சக்தி உள்ளது என்று நினைக்கிறார்கள். வெற்றிலை, பாக்கு சுண்ணாம்பு, பத்திரி, ஏலம், கிராம்பு என்று சொல்லி ஒரு பாட்டே இருக்கிறது. பத்தினியான பெண்கள்தான் அதிகமாக வெற்றிலை போடுவார்கள். அதுமட்டுமல்ல ஆண்கள், பெண்கள், கணவன், மனைவி உறவு நன்றாக இருக்க வேண்டுமானால், வெற்றிலை போட்டால் நாக்கு, வாய் எல்லாம் சிவந்து போனால், உறவு நன்றாக இருக்கும், கணவன், மனைவி உறவு நன்றாக இருக்கும் என்று நினைப்பார்கள். வாடிய, வதங்கிய வெற்றிலைதான் நிறைய இடத்தில் கிடைக்கிறது. இப்படி கணவன், மனைவி உறவு ஏற்படுகிற அளவிலும், பத்தினி பெண்கள் போடுகிற வெற்றிலை எல்லாம் தமிழ்நாட்டில் எந்தப் பகுதியில் கிடைக்கிறது? அந்த வெற்றிலை எல்லாம் பொது மக்களுக்கு சேருகின்ற அளவில் அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: புதுமணத் தம்பதிகள் போடுகிற வெற்றிலை, நீங்கள் கேட்டு என்ன பண்ணப்போகிறீர்கள்? (சிரிப்பு)

[1995 ஏப்ரல் 20

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெற்றிலை போடுவதற்கு எல்லோருக்கும் விருப்பம் இருக்கலாம். ஆனால் வெற்றிலையிலே தடவக்கூடிய சுண்ணாம்பை பக்குவமாகத் தடவ வேண்டும். அதுவும் நம்பிக்கைக்கு உரியவர்கள் தடவவேண்டும். எல்லோருமே, வெற்றிலை போட வேண்டும் தடவித் தாருங்கள் என்று சொன்னால், அதனுடைய நோக்கத்திற்கு தடவிவிட்டால், வெற்றிலை போட்ட வாயும் சிவக்கும், சிவந்த வாயிலே கொப்புளங்கள் ஏற்படும். வெற்றிலையை நாட்டு மருந்தாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கிராமப் பகுதியிலே நம்முடைய சித்த வைத்திய முறையிலும்கூட, சில மருந்துகளை உட்கொள்கிறபோது, அந்த வெற்றிலையை வைத்து சாப்பிட வேண்டும் என்று எல்லாம் சொல்கிறார்கள் என்று சொன்னால், எந்தவிதமான பின் விளைவுகளும் வராத தன்மையை இந்த வெற்றிலை உருவாக்கும் என்ற நம்பிக்கையிலே செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் ஜில்லாவில் மண்டபத்திலும், தங்கச்சிமடத்திலும் ரவேசி வெற்றிலை, கற்பூர வெற்றிலை, சாதாரண வெற்றிலை என்று மூன்று ரகமான வெற்றிலை கிடைக்கின்றது. ரவேசி வெற்றிலை என்பது மெல்லியதாக இளமையாக தோற்றமளிக்கும். கற்பூர வெற்றிலை, கற்பூர வாசனை உடையது. சாதாரண வெற்றிலை சாதாரணமாக இருக்கும். இந்தக் கற்பூர வெற்றிலையையும், ரவேசி வெற்றிலையையும் இணைத்து ஏதாவது புதிய ரகம் கண்டுபிடிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தாமரைக்கனி கேட்ட வெற்றிலை எல்லாம் எங்கள் இராமநாதபுரம் ஜில்லாவில் கிடைக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன். *(சிரிப்பு)*

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வேறு பகுதிகளிலே வெற்றிலை பயிரிடப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற நீருக்கேற்றவாறு, மண்ணுக்கேற்றவாறு அந்த வெற்றிலையினுடைய காரத் தன்மை, நிறம் ஆகியவை மாறுபட்டு வருகிறது.

1995 ஏப்ரல் 20]

எனவே இன்றைக்கு பாலக்காட்டிலேயிருந்து நேரடியாகப் பெறப்பட்ட வெற்றிலையிலிருந்துதான் புதிய ரகம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால் தமிழகத்தில் தர்மபுரி மாவட்டத்தில் நிறைய இடங்களில் வெற்றிலை பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கே பெண்கள் எல்லாம் சேர்ந்து அதாவது 21 பெண்கள் சேர்ந்து ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்துகிறார்கள். அந்த 21 பெண்களும் தங்களுக்குச் சொந்தமான நிலத்திலோ அல்லது குத்தகைக்குப் பெறப்பட்ட நிலங்களிலோ வெற்றிலை சாகுபடி செய்து அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒரு இடத்திலே போய் வெற்றிலை பறிக்கிறார்கள். அந்த வெற்றிலைதான் வங்காளதேசம், டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களுக்கெல்லாம் விற்பனைக்காகப் போகிறது. வெற்றிலையை ஒரு முறை கிள்ளிவிட்டால் பிறகு 21 நாட்கள் கழித்துத்தான் பறிக்கக்கூடிய பக்குவத்திற்கு வரும். எனவே கூட்டுறவு முறையில், சிறப்பான முறையில் தர்மபுரி மாவட்டத்தில் பெண்கள் இதை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அரசுகூட வாழ்த்துக்களும், விருதுகளும் தர ஆலோசித்துக்கொண்டிருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இராம. இராமநாதன், கும்பகோணம் என்பதால் அவருக்கு வாய்ப்பு.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெற்றிலை பற்றிப் பேசுகிறபோது இங்கே ஒருவரும் கும்பகோணம் பற்றியே சொல்லவில்லை. வெற்றிலை என்று சொன்னாலே கும்பகோணம் என்றுதான் சொல்வார்கள். என்னைப் பார்க்கிறபோது கூட பலரும், என்ன வெற்றிலை சௌக்கியமா என்றுதான் கேட்கிறார்கள். எனவே அந்த அளவுக்கு இன்றைக்கு வெற்றிலை எனது பகுதியில் சுவாமிமலை, ஆவூர், கும்பகோணம் மற்றும் மரியாதைக்குரிய உறுப்பினர் அக்கா அவர்கள் சொன்னதுபோல் தங்கச்சிமடம், ஓலைக்குடா, பிறப்பன்வலசை, பாலாந்தரவை, போன்ற இராமநாதபுரம் மாவட்டப் பகுதிகளிலும் இந்த வெற்றிலை விளைந்துகொண்டுதான் இருக்கிறது. கொழுந்து வெற்றிலையைப் போட்டால் கொழுந்தனுக்கே கூட சிக்கல் என்று சொல்கிற அளவுக்கு வெற்றிலையின் பெருமையைச் சொல்வார்கள். எனவே இந்த வெற்றிலைக் கொடிக்கால் விளைகிற பகுதிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியமும் கொடுத்து இந்த வெற்றிலை பயிரிடுபவர்களுக்கு

அதிகமான வாய்ப்புகளும் இந்த தமிழக அரசின் மூலம் செய்து கொடுப்பார்களா? தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் இது அதிகம் விளைகிறது என்று மீண்டும் ஒரு முறை அறிவியல் பூர்வமாக நுணுக்கமாகப் பார்த்து அனைத்து இடங்களிலும் இந்த வெற்றிலை பயிரிடுகிற வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பார்களா? வெற்றிலை மூலம் நம்முடைய விவசாயத் துறைக்கு அதிகமான வருவாய் வரக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன். மேலும் இந்த கும்பகோணம் வெற்றிலையை அனைவரும் பயன்படுத்தவேண்டும் என்பதை வேண்டுகோளாக வைத்து அதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் கொழுந்து வெற்றிலை என்று சொல்கிற நேரத்தில் தக்காளிப் பழத்திற்கு இணையாகச் சொல்வார்கள். ஒரு பாடல் கூடச் சொல்வார்கள். கும்பகோணம் கொழுந்து வெற்றிலை, தக்காளிப் பழமே என்று சொல்வார்கள். அதாவது கும்பகோணம் வெற்றிலையைப் போட்டால் தக்காளிப் பழ நிறத்திற்குச் சிவப்பாக இருக்கும் என்று சொன்னார்கள். இன்றைக்கு அந்த அளவுக்கு அந்த வெற்றிலையைப் போட்டால் சிவப்பாக இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இன்றைக்கு வெற்றிலை போடக்கூடிய பழக்கம் குறைந்து வருகிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். இருந்தாலும் பரவலாக கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய பெரியவர்கள் இன்னும் இதைப் பயன்படுத்துகிறார்கள். இன்னும் சொல்லப்போனால் ஒருசிலர் அசைவ உணவு சாப்பிடுகிறபோது இந்த வெற்றிலையைப் போடுகிறார்கள். இதிலே வருமானம் கிடைக்கிறது. இந்தத் தொழிலை நடத்துவதற்கு விவசாயிகளுக்கு அரசு மானிய விலையில் பல்வேறு இடுபொருட்களை வழங்கிக்கொண்டிருக்கிறது. தொழில்நுட்பத்தைத் தந்து கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 373, திரு சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.